**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 14.12.2018–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி,
நாள் : **14.12.2018**

தனி அலுவலர்,
இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

**(1)** இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் தனியார் நிறுவனங்களுக்கான பொறுப்புணர்வு நிதி (CSR) மூலம் **26** இடங்களில் தானியங்கி குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க **30.11.2018** அன்று வரப்பெற்ற EOI ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

**1)** M/s. Water Life India Private Limited, Hydrabad - Online மூலமாகவும்
**2)** M/s. Apex Associates, Erode - Offline மூலமாகவும் வரப்பெற்றன.

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களும் உரிய தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளன. அதன்படி, **14.12.2018–இல்** விலை விவரம் குறிப்பிடப்பட்ட 2–ஆம் உறை (Price Bid) திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலை விகிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

| | | **M/s. Water Life India Private Limited, Hydrabad** | **M/s. Apex Associates, Erode** |
|---|---|---|---|
| 1) | Rate of remittance to the Municipality (Rate per 20 lit.) | `. 1.00 | `. 1.00 |
| 2) | Rate to be charged for sale to public (Rate per 20 lit.) | `. 7.00 | `. 7.00 |
| 3) | Rate to be charged for sale to public (Rate per 1 lit. for chilling machine) | `. 2.00 | `. 1.00 |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. Apex Associates, Erode நிறுவனத்தின் விலை மூன்று இனங்களிலும் குறைவாக உள்ளதால், அந்நிறுவனத்தின் EOI ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** விலை விகிதம் குறைவாக குறிப்பிட்டுள்ள M/s. Apex Associates, Erode நிறுவனத்தின் EOI ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**(இ2/2779/18)**

**தீர்மானம் எண். 471**

ஏற்கப்பட்டது

( 2 ) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் தனியார் நிறுவனங்களுக்கான பொறுப்புணர்வு நிதி (CSR) மூலம் **26** இடங்களில் தானியங்கி குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க விருப்ப அறிவிப்பு **15.11.2018** அன்று மாநில அளவில் வெளியிடப்பட்டதற்கான விளம்பரக் கட்டணங்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| **1)** டெக்கான் க்ரானிக்ஸ், தமிழ்நாடு | - | `. 34650/- |
| 2) மக்கள் குரல், தமிழ்நாடு | - | `. 33750/- |
| | | `. 68400/- |
| மாநில / மத்திய சரக்கு மற்றும் சேவை வரி | – | `. 3420/- |
| **மொத்தம்** | **–** | **`. 71820/-** |

`. 71820/- விளம்பரக் கட்டணம் ரவி பப்ளிசிட்டி சர்வீஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/2779/18)

**தீர்மானம் எண். 472**

அனுமதிக்கப்பட்டது

( 3 ) இராசிபுரம் நகராட்சியில் தூய்மை பாரத திட்டத்தின்கீழ் தட்டான்குட்டை உரக்கிடங்கில் குவித்து வைக்கப்பட்டுள்ள குப்பைகளை (Bio Minings) அகற்ற மூன்றாம் அழைப்பாக **11.10.2018** அன்று கீழ்க்கண்டுள்ளவாறு மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| **1)** | Trinity Mirror | தமிழ்நாடு | `. 33750/– |
| **2)** | மக்கள் குரல் | தமிழ்நாடு | `. 33750/– |
| | | **மொத்தம்** | **`. 67500/–** |
| | மாநில / மத்திய சரக்கு மற்றும் சேவை வரி | | `. 3375/– |
| | | **ஆக மொத்தம்** | **`. 70875/–** |

`. **70875/–** விளம்பரக் கட்டணம் ரவி பப்ளிசிட்டி சர்வீஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/1899/18)

**தீர்மானம் எண். 473**

அனுமதிக்கப்பட்டது

ஒம் /– ரா. மகேஸ்வரி,
தனி அலுவலர்

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.